MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :5 /Issue 5 / November 2025 E-ISSN 3049-3676 (Online)

மேன்மதி கோவை தமிழ் மன்றம்

சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்

MENMATHI KOVAI TAMIL MANDRAM

INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS

# சூல் புதினத்தில் பறவை சார் பதிவுகள்

**விஜயன் மு**
**உதவிப் பேராசிரியர்**
**தனலட்சுமி சீனிவாசன் பொறியியல் கல்லூரி(தன்னாட்சி)**
**கோயம்புத்தூர்** 641105
**vijayrsvm1886@gmail.com**
**9787835259**

# Bird-Centered Narratives and Nature-Based Knowledge in Sool”

**M.Vijayan**
**Assistant Professor**
**Dhanalakshmi Srinivasan College of Engineering (Autonomous),**
**Coimbatore 641105**
**vijayrsvm1886@gmail.com**
**9787835259**

## ABSTRACT

Human life is intrinsically intertwined with nature. From the prehistoric era to the present age of advanced civilization, human activity has continually evolved in close dependence on the natural world. Nature-based human knowledge, accumulated over generations, has been deeply embedded in the collective unconscious and transmitted through traditions and customary practices.In land-centered novels, just as importance is accorded to plot and characters, equal significance must be given to the appropriate use of themes that

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :5 /Issue 5 / November 2025 E-ISSN 3049-3676 (Online)

vividly articulate the cultural and ecological specificity of the region. In this regard, Dharman stands out as a writer adept in creating region-based narratives that authentically reflect the culture and lived experiences of the people. This essay examines the bird-related representations in the novel Sool and explores how these depictions reveal the indigenous ecological knowledge and nature-centered worldview of the community portrayed in the text.

## ஆய்வுச்சுருக்கம்

மனிதனின் வாழ்வு இயற்கையோடு ஒன்றியது. கற்காலம் தொடங்கி நாகரிகம் வளர்ந்த இன்றைய காலம் வரை இயற்கையயைச் சார்ந்தே மனித இயக்கம் அமைகிறது. இயற்கை சார்ந்த மனிதனின் அறிவானது காலம் காலமாய் நனவிலி மனதில் பதிந்தும் வழக்காறுகளாகவும் கடத்தப்பட்டுக்கொண்டே இருக்கிறது. நிலம் சார்ந்து படைக்கப்படக் கூடிய புதினங்களில் கதைக்கும் கதை மாந்தருக்கும் முக்கியத்துவம் கொடுப்பதைப் போன்று அவ்வட்டாரத்தை மக்களிடையே ஆழ்ந்து வெளிப்படுத்துவதற்குக் கருப்பொருள்களையும் ஆசிரியர் சரிவரக் கையாள வேண்டும். மக்களின் பண்பாட்டினையும் வாழ்வியலையும் பரதிபலிக்கக் கூடிய நிலம்சார்ந்த படைப்புகளை எழுதுவதில் சோ.தர்மன் கைத்தேர்ந்தவர். சூல் நாவலில் ஆசிரியர் வெளிப்படுத்தியுள்ள பறவை சார்ந்த பதிவுகளையும் மக்களின் இயற்கை சார்ந்த அறிவினையும் வெளிப்படுத்துவதாக இக்கட்டுரை அமைகிறது.

## திறவுச்சொற்கள்

சூல், பறவைகள், நிமித்தம், வளமையின் குறியீடு, நம்பிக்கைகள், புள்ளினம்,

## முன்னுரை

தொல்காப்பியர் வாழ்வின் இன்றியமையாப் பொருட்களாய் முதற்,கரு,உரி ஆகிய முப்பொருள்களை வகுத்துள்ளார்.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :5 /Issue 5 / November 2025 E-ISSN 3049-3676 (Online)

கருப்பொருட்கள் என்பவை மனிதனின் வாழ்வியலில் முக்கியப் பங்காற்றக்கூடிய அகப்பொருள் கூறுகளாகும். பறவை என்பது அத்தகைய கருப்பொருட்களுள் ஒன்று. இயற்கையைக் கொண்டே இயற்கை சார்ந்த புரிதல்களை மனிதன் அடைகிறான். நிலம் சார்ந்த படைப்புகளில் மக்களின் வாழ்வியலைப் புரிந்து கொள்வதற்கும் இயற்கையோடு அம்மக்கள் கொண்டிருக்கும் பிணைப்பை விளங்கிக் கொள்வதற்கும் இத்தகு கருப்பொருள் பயன்பாடு அவசியமாகிறது. தென் தமிழகத்தின் கரிசல் நிலப் பகுதியை மையமாகக் கொண்ட சூல் புதினமானது நிலம் சார்ந்த வாழ்வியலை நுணுக்கமாகப் வெளிப்படுத்துகிறது. மக்களின் நம்பிக்கைகளிலும் சடங்குகளிலும் பறவைகள் இடம் பெற்றிருப்தோடு அது சார்ந்த பெற்றிருக்கக் கூடிய அறிவினையும் மக்கள் பெற்றிருப்பதை ஆசிரியர் பதிவு செய்துள்ளார்.

**பறவைசார் நம்பிக்கைகள்**

மனிதன் இயற்கையின் மீது கொண்டிருந்த அச்சத்தின் விளைவே நம்பிக்கைகள் தோன்றுவதற்கான அடிப்படைக் காரணமாகும். இயற்கையின் படைப்புகளான பறவை, விலங்கு போன்றவற்றின் நிமித்தங்கள் மக்களின் நம்பிக்கைகளுக்கு அடிகோளுகின்றன. இந்நம்பிக்கைகள் தொடர்ந்து மக்களிடையே இன்றளவும் கடைபிடிக்கப்பட்டு வருகின்றன.

**தோள்வழி யாப்ப ஈண்டுநம் வரவினைப்**
**புள்அறி வுறீஇயின கொள்ளோ தெளிதின்**
**(நற்றிணை.**161)

தலைவனின் வருகையினைப் புள்ளினங்கள் முன்னரே அறிவித்துவிட்ட செய்தியினை நற்றிணை குறிப்பிடுகிறது. பறவைகள் தொடர்ந்து கரைவது விருந்தினரின் வருகையை அறிவிக்கும் நிமித்தமாக சங்க காலத்தில் கருதப்பட்டது.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :5 /Issue 5 / November 2025 E-ISSN 3049-3676 (Online)

இன்று வரை மக்களின் வாழ்வியலில் இந்நிமித்தத்தைக் கடைப்பிடிப்பதை அறியமுடிகிறது. இயற்கையின் அங்கமாக இருக்கக்கூடிய பறவைகள் மக்களின் வாழ்வியலில் பெற்றிருந்த இடத்தினை இதன்கண் அறியமுடிகிறது.

**வளமையின் குறியீடு**

பறவைகளில் அரியதாய் கண்ணில் காணப்படும் நாமக்கோழியைப் பார்ப்பது நன்மை பயக்கும் என்பது நம்பிக்கை. நாமக்கோழி வளமைசார் நம்பிக்கையாகப் பார்க்கப்படுகிறது.

"**நாமக்கோழியின் வரவு என்பது ஒரு பறவையின் வரவு மட்டுமல்ல கிராமத்தின் செழிப்பையும் அவ்வருட வெள்ளாமையின் உத்திரவாதத்தையும் மழை அதிகரிப்பதையும் நீர் நிலையங்களின் நிரம்பலையும் உறுதி செய்து கிராம மக்களின் சந்தோசத்தையும் குதூகலத்தையும் கொண்டுசேர்க்கும் வரவாகும்**" (**சூல்**,**ப**.67) நாமக்கோழி மழைப் பொழிவின் அறிகுறியாக நம்பப்படுகிறது. நாமக்கோழி அதிசயமானது. அது எளிதில் ஒருவர் கண்ணில் படாது. சொற்பமானவரே இதுவரை நாமக்கோழியைப் பார்த்ததுண்டு. எனவே நாமக்கோழியைக் காண்பது என்பது அதிசயமாகப் பார்க்கப்படுகிறது. நாமக்கோழி இலைகளின் மீது கால் வைத்து நடந்து செல்வது தண்ணீரில் நடந்து செல்வதைப் போன்று காட்சியளிக்கும். ஊரணிகளிலும் கண்மாய்களிலும் காணப்படும் பிற பறவைகளைப் போன்று கூட்டமாகவும் ஜோடியாகவும் நாமக்கோழியைக் காணமுடியாது. தனியாகவே இப்பறவையானது தென்படும்.

"**ஊரில் முதன் முதலில் நாமக்கோழியைப் பார்த்தவனுக்குக் காளியம்மன் கோயில் பொங்கல் அன்றைக்கு நீர்பாய்ச்சியின்**

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :5 /Issue 5 / November 2025 E-ISSN 3049-3676 (Online)

**கைகளால் வேட்டித்துண்டு கிடைக்கும். ஊரே கூடிநின்று கூத்தாடும். இந்தவருடம் சங்கிலிப் பையன் கண்ணில் தட்டுப்பட்டு இருக்கிறது**" (**சூல்**,**ப.**68)

அரிதாக மக்களின் கண்களில்படுவதால் இப்பறவையின் வருகைக் கொண்டாட்டத்திற்கு உரியதாக மாறுகிறது. நீர்நிலையை ஆதாரமாகக் கொண்டு வாழக் கூடியது நாமக் கோழியின் வருகை மழையின் வருகையை அறிவிக்கக் கூடியதாக இருப்பதால் மக்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்துகின்றனர். அத்தோடு நீர்நிலையானது தூய்மையாக இருப்பதற்கான அறிகுறியாகவும் காணப்படுகிறது. நாமக்கோழியின் வருகை மக்களுக்குப் பொதுவான வளமையை அளிப்பதால் அதனை காணும் தனி மனிதருக்கும் நன்மை தரும் என்றும் மக்கள் நம்பிக்கைக் கொண்டிருப்பது வெளிப்படுகிறது.

**இறப்பின் நிமித்தம்**

நல்லதின் நிமித்தமாகப் பறவைகளைக் கருதுவதைப் போலவே தீயதை உணர்த்தும் வல்லமைப் படைத்தவையாகக் கருதப்படுகின்றன.

"**நாளை ஒரு உசுரு சாகப் போகுதுனு சாக் குருவி ஒரே சத்தத்துல சொல்லிவிட்டு அதுபாட்டுல பறந்து பொயிறது**" (**சூல்**,**ப.**8) சாவை அறிவிப்பதால் அப்பறவைக்கு 'சாக்குருவி' என்று அழைக்கப்படுகிறது. இலக்கியங்களில் கரிக்குருவி என்றும் இக்குருவி கத்துவது இறப்பின் அறிகுறியாகப் பார்க்கப்படுகிறது. கத்திய மூன்று நாட்களுக்குள் இறப்பு நிகழுமென்பது நம்பிக்கையாக உள்ளது. இது உண்மையானது என்று நம்புவதற்கோ அறிவியல் ரீதியாக மெய்ப்பிப்தற்கோ எவ்விதமான சான்றும் இல்லை. இந்நிகழ்வானது எதிர்பாரதவிதமாக ஒன்றுக்கொன்று தொடர்ச்சியுடையதாக இருப்பது குறிப்பிடத்தக்கது.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :5 /Issue 5 / November 2025 E-ISSN 3049-3676 (Online)

கூகை அலறினால் மரணம் நிகழும் என்ற நம்பிக்கை சங்க கால மக்களிடத்தில் இருந்துள்ளது. இருப்பினும் இந்நம்பிக்கையானது இன்றளவும் மக்களிடையே நீக்கமற நிறைந்திருக்கிறது என்பதை நாவலாசிரியர் வழி உணரலாம். பறவைகள் மூலம் இவ்வாறு மரணத்தை முன்னரே அறிவிப்பது கடவுளின் செயலாக நம்பப்பட்டு வந்துள்ளது.

அதேபோல் சில பறவைகள் அபசகுணமாகக் கருதப்படுகின்றன. எமனின் தூதுவனாகக் காக்கைப் பார்க்கப்படுகிறது. இதனை மக்கள் முன்னோர்களாகக் கருதினாலும் காக்கையை வீட்டுக்குக் கொண்டு வருவது அபசகுணமாகக் கருதுகின்றனர்."**இதக் கொண்டு வரதும் எமனக் கொண்டு வர்ரதும் ஒன்னுனு தெரியலையாக்கும் கூறு கெட்ட மனுசா**" (**சூல்**,**ப.**4) என்று கதாப்பாத்திரம் கூறுவது மூலம், காக்கை வீட்டிற்குள் வருவது மூலம் சாவு வரும் என்பது மக்களால் நம்பப்படுகிறது. இக்கருத்தானது சங்க இலக்கியத்திற்கு முரணாக அமைகிறது. காக்கையின் வருகை விருத்தினர்களைக் குறிப்பதாக அமைவது பிற்காலத்தே மாறியிருப்பது தெரியவருகிறது.

ஆந்தையும் இதே போலவே கருதப்படுகிறது. ஆந்தையின் அலறல் ஒலி துன்பத்தை உண்டாக்கும் என்ற எண்ணம் மக்களுக்கு உண்டு. இன்றளவும் இச்சிந்தனையைப் பலரிடம் காணமுடியும்.

"**முதுமரப் பொந்தின் கதுமென இயம்பும்**" (**புறம்**.ப.364.11)

"**நெடுநகர் வீழ்ந்த கரிக்குதிர்ப் பள்ளிக்**
**குடுமிக் கூகை குராலொடு முரல**" (மதுரை. பக். 169-170)

கூகையின் ஒலிப்பு முறை இறந்தவர்களை அழைப்பதாகக் கருதும் நம்பிக்கையுணர்வு இருந்துள்ளது என்பது சங்க இலக்கியங்கள் வழி அறியமுடிகின்றது.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :5 /Issue 5 / November 2025 E-ISSN 3049-3676 (Online)

"**ஆந்தையை முக்காலம் உணர்ந்த ஞானியாகக் கருதி இருடி என்றழைத்தனர். மேல் நாடுகளில் ஆந்தையை ஞானம் நிறைந்த பறவை என்று கருதுவதும் உண்டு.**" (சாமி.பி.எல்.,சங்க இலக்கியத்தில் புள்ளின விளக்கம், ப.311) என்பதன் மூலம் ஆந்தையின் அறிவுத்திறத்தை அறியமுடிகிறது.

"**ஆந்தையின் ஒற்றை அலறல் மீண்டும் கேட்டது. யாரவது ஒருத்தன் போயி வெரட்டி விடுங்கல ஆக்கங் கெட்ட கழுத அபசகுணம் மாதிரி அலறிக்கிட்டு**" (சூல்,ப.75) என்பதன் மூலம் ஆந்தையின் அலறலை மக்கள் வெறுப்பதை அறியலாம். இதனை மேலும் ஒரு இடத்தில் ஆசிரியர் சுட்டுகிறார். கூட்டம் நடக்கும் போதெல்லாம் வந்து அலறிக் கொண்டு இருப்பதால் அதனைக் கொன்றுவிடவும் துணிகின்றனர். இதன் மூலம் ஆந்தையின் அலறல் அபாசகுணமானது என்ற எண்ணம் ஆழப்பதிந்து இருப்பதை அறியமுடிகிறது. "**ஆந்தையின் அலறலைக் கேட்டு அக்கால மக்கள் தமக்கு வரவிருக்கும் நன்மை தீமைகளை முன் கூட்டிக் கூறுவர். ஒருமுறை கூப்பிடுவதால் சாவு, இரண்டானால் காரியம் கை கூடுதல், மூன்றானால் மனைவி வருதல், நான்கானால் கலகம், ஐந்தானால் பயணம், ஆறானால் அடுத்தவர் வருகை, ஏழானால் இழந்த பண்டம் கிட்டுதல்,எட்டானால் சாவு, ஒன்பதும் பத்துமானால் நன்மை உண்டாகும்**"
(சென்னகேசவலு.சி.கு., ஐந்திணைப் பறவைகள், ப.47) என்ற செய்தியின் மூலம் ஆந்தையின் ஒவ்வொரு ஒலியையும் மக்கள் வாழ்வியலோடு தொடர்புபடுத்திக் கொண்டமை வெளிப்படுகிறது.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :5 /Issue 5 / November 2025 E-ISSN 3049-3676 (Online)

**பனைமரமும் பறவைகளும்**

பனை மரத்தின் தன்மைகளை அறிந்து கொள்வதற்கு பறவைகள் காரணமாகின்றன. ஆண் பனை, பெண் பனை என பனைகளைப் பறவைகள் கூடு கட்டுவதை வைத்து அறிந்து கொள்ள முடிகின்றது.

“**எந்தெந்த பனையில கூடு நெய்யா கெட்டியிருக்கோ அதுல அம்புட்டும் ஆண்பனைக. ஒன்னு ரெண்டு கூடுக தொங்குற பனைக அம்புட்டும் பொட்ட பனைக**” (சூல்,ப.**9)** பறவைகள் மரங்களின் தன்மையை நன்குணர்ந்து இருக்கின்றன. குழைகள் தள்ளாது கதிர் தள்ளும் பனை மரங்கள் ஆண் மரங்கள். அம்மரங்களில் நிறைய இடம் கொண்டிருக்கும். அதனால் ஆண் பனைகளில் குஞ்சுகளைக் காக்க கூடு கட்டும். பெண்பனைகளில் காய்கள் அதிகம் இருப்பதால் ஒரிரு கூடுகள் மட்டுமே கட்டி தனிமையில் இருக்கும். தங்கள் வாழ்விடங்களைத் தங்கள் தேவைகளுக்கு ஏற்ப இயற்கைக்கு ஏற்றவாறு அமைத்துக் கொள்;கின்றன. பறவை சார் நம்பிக்கையாக இல்லாமல், பறவைகள் மனிதருக்கு காட்டும் உதவியாக இதனைக் கருதலாம். பனை மரங்களை அடையாளம் கண்டு கொள்ளுவதற்காக இது பயன்படுகிறது.

**காக்கையும் பண்பாட்டுத் திரிபும்**

காகம் மக்கள் அன்றாட வாழ்வில் கடந்து வரும் ஒரு பறைவையினம். முன்னோர்கள், பகிர்ந்துண்ணுதல் போன்ற நம்பிக்கைகளுக்குக் காக்கை இனம் வழி வகுக்கின்றது. பல்வேறு வழிகளில் காக்கையானது மனிதர்கள் வாழ்வில் ஒன்றாக கலந்து இருக்கின்றது. காக்கைக்கு கோணப் பார்வை இருப்பதற்கு ஒரு கதை சொல்லப்படுகிறது.

பரமசிவன் பார்வதி உலகத்தைச் சுற்றி பார்த்துவிட்டு ஓய்வு எடுக்க வேப்பமர நிழலில் ஒதுக்குகின்றனர். அப்போது இருவரும் தூங்கி விடுகின்றனர்.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :5 /Issue 5 / November 2025 E-ISSN 3049-3676 (Online)

மரத்தில் அமர்ந்து இருந்த காகமானது பார்வதியின் மார்பினைப் பழம் என்று நினைத்துக் கொத்திவிட்டது. கொத்திய இடத்தில் இரத்தம் வர எழுந்த பார்வதி பல்வேறு சாபங்களைத் தருகிறாள். அதுவே காக்கையின் இயல்பாக பிற்காலத்தில் மாறிவிட்டதாக மக்கள் நம்புகின்றனர். முதலாவதாக கூர்மையானப் பார்வையினாலேயே இச்செயலை காகம் புரிந்ததனால் கோணப் பார்வையைச் சாபமாகத் தருகிறாள். பகுத்துண்ணும் குணமுடையது காகம். அதற்கும் பார்வதியின் சாபமே காரணம் என கருதப்படுகிறது.

"**ஒங் கண்ணுக்கு எது தட்டுப்பட்டாலும் ஒன்னால ஒளிச்சு வச்சு தனிய திங்கத் தெரியாது ஊரைக் கூட்டி கூப்பாடு போட்டு பிச்சி பிடுங்கி சிந்தி சிதரித்தான் தின்பணு**" (சூல்,ப.**18)** இதனாலேயே காகம் கரைந்து ஊரைக் கூப்பிட்டு உண்ணுகிறது. இதோடு மட்டுமல்லாமல் காகம் தினமும் குளிப்பதும் இதனாலேயே என்கின்றனர். குயிலானது தனது கூட்டில் முட்டையிடாமல் காக்கை கூட்டுல் முட்டையிடும் தன்மையுடையது. காக்கையே குயில் முட்டையை அடைகாத்து வளர்க்கும். இதுவும் இச்சாபத்தாலே நிகழ்கிறது. "**ஒன்னோட வம்சத்தையும் சேர்த்து இன்னொரு பறவையோட வம்சத்தையும் காத்து வளர்த்தும் காப்பாத்தனும்**" **(**சூல்,ப.**18)** என்பதாக அச்சாபம் சுட்டப்படுகிறது.

இவ்வாறு வாழ்வில் மனிதரோடு ஒன்றிப்போன ஒரு பறவையினத்தை நன்கு கவனித்து அதனுடைய செயல்பாடுகளுக்கு ஒரு கதையைக் கட்டமைக்கின்றனர். இதற்கு நம்மால் உறுதியான விளக்கங்களையும் சான்றாதாரங்களையும் கண்டுபிடிக்கவியலாது. இருந்தாலும், நம்பிக்கைகளாய் மக்களிடையே கலந்துவிட்டன. இவை மனிதரால் உருவாக்கப்பட்டவை என்பதே உண்மை என்று கொண்டால்,

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :5 /Issue 5 / November 2025 E-ISSN 3049-3676 (Online)

மனிதர்கள் தங்களுடன் வாழும் பிற உயிரினங்களை எவ்வளவு ஆழமாக உற்றுநோக்குகின்றனர் என்பதனை அறிந்துகொள்ள முடியும். காக்கை புணர்வது மிக தனிமையிலே நடக்கும் என்பதைக் கூட விளக்கிச் சுட்டும் ஆற்றல் கவனிப்பதாலேயேக் கிடைக்கின்றது. பறவையின் இயல்புகளைக் கதைகள் வழியாக மக்கள் மனதில் பதித்துவிட இத்தகைய கதைகள் தோற்றுவிக்கப்பட்டு இருக்கலாம்.

**மழையின் நிமித்தம்**

பறவைகள் இயற்கையினை நன்குணர்ந்து அதன்வழி தங்கள் வாழ்வியலை மாற்றியமைத்து கொள்ளத்தக்கன. பறவைகளை உன்னிப்பாக கவனிப்பதின் மூலம் இயற்கையில் நடக்கும் மாற்றங்களை அறிந்து கொள்ள இயலும். அப்படிக் கண்டறிவதனை மக்கள் நம்பிக்கைகள் எனக் கடைபிடிக்கின்றனர். இவ்வாறு மழைப் பெய்வதற்கு தூக்கணாங்குருவி கூடு கட்டுவதை அறிகுறியாக கொள்கின்றனர்.

"**தூக்கணாங்குருவிக் கூடுகளில் கீழ்ப்பக்கம் உள்ள வாசல் போக பக்கவாட்டில் ஒவ்வொரு கூட்டில் ஒரு வாசல் இருக்கும். இந்த பக்கவாட்டு வாசல்கள் தெற்குப் பக்கம் பார்த்தபடி பெரும்பான்மையாக இருந்தால் அந்த வருசம் வடகிழக்குப்**; **பருவமழை அதாவது வடக்கத்தி மழை ஜாஸ்தி. பெரும்பான்மைக் கூடுகளின் வாசல்கள்**; **வடக்குப் பக்கம் பார்த்தபடி இருந்தால் தெக்கத்தி மழை அதாவது தென்மேற்கு பருவமழை ஜாஸ்தி**" (சூல்,ப.7)

இந்நம்பிக்கையானது காலம் கடந்து மக்களிடையே நிலைத்து நிற்கிறது. மழையில் இருந்து கூட்டைக் காத்துக்கொள்ள மழை வராத திசையில் பறவை கூடு கட்டியிருக்கும். இதனை உணர்ந்து மனிதன் நம்பிக்கையை வளர்த்துக்கொண்டான். இதுபோன்றே கண்மாய்க்குள்

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :5 /Issue 5 / November 2025 E-ISSN 3049-3676 (Online)

வளர்த்திருக்கும் மரக்கிளைகளில் பறவைகள் கூடு கட்டும். கட்டும் கூடுகள் உச்சிக்கொப்பில் கட்டியிருந்தால் மழை அதிகம் இருக்கும். தாடிக்கொப்புகளில் கூடுகள் கட்டினால் அரை பெருக்கு மழையாகவே இருக்கும் என்பது நம்பிக்கை. அறிவியல் ரீதியாக பறவைகள் காற்றில் உள்ள ஈரப்பதத்தை அறிந்து அதன் வழி இவ்வாறு கூடுகளை அமைத்துக் கொள்கின்றன. மழை அதிகம் பெய்யும் என்று உணர்ந்தால் தங்களைக் காத்துக்கொள்ள உயரமாக கூடுகள் கட்டிக்கொள்கின்றன. பறவைகளுடைய பாதுகாப்பு உணர்வு மனிதர்களுக்கு அறிவிப்பாய் அமைகின்றது.

இதே போல் மழைவருவதைப் பறவைகள் பலவாறு உணர்த்திச் செல்கின்றன. தைலான் குருவி, கூகை ஆகியவையும் மழையை உணர்த்தவல்லன.“**தைலான் குருவி தாழப்பறந்து திரியும்.**” “**ராவுல கூக கூப்பாடு போடும்**” (சூல், ப.20) என்று ஆசிரியர் இதனைக் குறிப்பிடுகிறார். கூகை இரவில் தொடர்ந்து அலறுவது மழைக்கான அறிகுறியாகும். இதில் தைலான் குருவிக்கு “மாரிக்குருவி” , “மழைக்குருவி” போன்ற பெயர்கள் வழக்கில் இருப்பதைக் காணமுடிகிறது. தைலான் குருவியானது இமய மலையில் இருந்து மழைக்காலத்தில் தமிழ்நாட்டிற்கு வரும். ஐப்பசி,கார்த்திகை மாதங்களில் தைலான் குருவியை ஊர்முழுக்க காணமுடியும். மின்கம்பிகளில் வரிசையாக அமர்ந்திருந்தும் தரையை ஒட்டிப் பறந்து கொண்டும் குறிப்பிட்ட காலத்தில் மட்டுமே காணக்கூடிய இப்பறவை மழைவருவதை முன்னரே உணர்த்துவதாய் இருக்கின்றது. அவ்வாறன இயற்கை அறிகுறிகள் வேளான் செய்வோருக்கும் மழையைச் சார்ந்த தொழில் புரிவோருக்கும் இப்பறவைகள் வழிகாட்டியாய் அமைகின்றன. இயற்கையை நன்குணர்ந்து அதனை அறிந்து

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :5 /Issue 5 / November 2025 E-ISSN 3049-3676 (Online)

அதனோடு இயைந்து அதுசார்ந்த புரிதலுடன் மனிதன் வாழும் போதுதான் இயற்கைக்கும் மனித குலத்திற்கும் தீங்கு ஏற்படாதிருக்கும்.

**முடிவுரை**

சூல் புதினத்தில் பல்வேறு கருப்பொருள்களை ஆசிரியர் கையாண்டுள்ளார். மக்களின் அன்றாட வாழ்வியலோடு இவை நெருங்கிய தொடர்பு கொண்டுருப்பதாலேயே ஆசிரியரால் எளிதில் கையாள முடிந்திருக்கிறது. சங்க இலக்கியத்தின் மூலம் மக்களின் வாழ்க்கைமுறை வெளிப்பட்டிருப்பதைப் போன்றே இக்கால இலக்கியங்களும் மக்களின் பல்வேறு வாழ்க்கைக் கூறுகளை வெளிப்படுத்துகின்றன. இன்றைய மக்களின் வாழ்வில் பறவைகள் நிமித்தங்களாகவும் காலம் உணர்த்தும் கருவிகளாகவும் இயற்கை சார்ந்த அறிவினைப் பெருக்கிக் கொள்ளவும் பயன்பட்டமையை சூல் புதினத்தின் வழி உணரலாம். மக்கள் இயற்கையோடு கொண்டிருந்த தொடர்பு மக்களின் மனங்களில் ஆழப் பதிந்து இருப்பதாலேயே இன்றளவும் மக்களின் பண்பாட்டில் நீக்கமற நிறைந்திருக்கின்றன. இத்தகு இயற்கை சார்ந்த அறிவினையும் பண்பாட்டுப் பதிவுகளையும் அதன் உள்ளார்ந்த அர்த்தத்தோடு உணர்ந்து கொண்டு வருங்காலத்திற்குக் கடத்துவது அவசியமாகும். அவ்வாறு செய்வதன் மூலமே முன்னோரின் மரபார்ந்த அறிவினைக் காக்க முடியும். தன் படைப்பின் மூலம் அத்தகுப் பணியை ஆசிரியர் தர்மன் செய்திருக்கிறார் என்பது ஆய்வின்வழிப் புலப்படுகிறது.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :5 /Issue 5 / November 2025 E-ISSN 3049-3676 (Online)

**துணைநூற்பட்டியல்**

1. ஔவை துரைசாமிப்பிள்ளை, சு., (உரை) 1951, புறநானூறு மூலமும் உரையும், சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.
2. சாமி.பி.எல்.,சங்க இலக்கியத்தில் புள்ளின விளக்கம், 1976, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.
3. சென்னகேசவலு.சி.கு.,ஐந்திணைப் பறவைகள், 1959, ராயன் பப்ளிசிங் ஹவுஸ், சென்னை
4. சோமசுந்தரனார்.பொ.வே., (உரை) 1959, மதுரைக் காஞ்சி மூலமும் உரையும், சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.
5. பின்னத்தூர் நாராயணசாமி ஐயர், அ.,(உரை) 1952, நற்றிணை நானூறு., சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.